| | | |
|---|---|---|
| சாட்சி : DW 1<br>திருமதி. மணிமேகலை<br>க.பெ. திரு. அயினான் | அ.வ.எண்.212/2019 | 04.02.2026 |

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

12) இவ்வழக்கில் வாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவண விபரங்கள் குறித்து அதனை பார்த்து படித்து வழக்கறிஞர் மூலம் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு மேல்புறத்தில் வாதி வகையறா நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நிலத்தில் தான் வாதி வகையறா கிழக்கு பார்த்து வாசல் வைத்து வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். வழக்குரை மாதிரி வரைபடத்தில் கண்டவாறு தற்போதும் பூமியில் பௌதீக அமைப்பு உள்ளது என்றால் சரிதான்.

13) கலைமணி யார் என்றால் எனது மாமனாரின் 2 வது மனைவியின் மகள் அதாவது எனது ஒன்றுவிட்ட நாத்தனார். எனது கணவர் எனது மாமனார் சேவுகனின் முதல் தாரத்து மகன் என்றால் சரிதான். எனது மாமனார் சேவுகனின் தாயார் பெயர் கருப்பாயி, தந்தை பெயர் அயினான் என்றால் சரிதான். அயினான்–கருப்பாயி தம்பதியினருக்கு எனது மாமனார் சேவுகன் மட்டுமே ஒரே மகன் என்றால் சரிதான். மேற்படி சேவுகனுக்கு எனது கணவர் மட்டுமே ஒரே மகன் என்றால் சேவகத்தி, ராசம்மாள் என்ற இரண்டு மகள்களும் உள்ளனர்.

14) சேவுகனின் 2 வது மனைவியின் பெயர் என்ன என்றால் பாப்பா. முதல் மனைவி பெயர் என்ன என்றால் பழனியம்மாள். மேற்படி சேவுகன்–பாப்பா தம்பதியினருக்கு பிறந்தவரே கலைமணி என்றால் சரிதான். மேற்படி சேவுகன் தனது 2 வது தாரத்து மகளுக்கு வழக்கு சொத்திற்கு கீழ்புறம் உள்ள சொத்தில் 1/3 பகுதியை பொறுத்து ஒரு உயில் ஆவணம்

ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, மேற்படி உயில் ஆவணம் குறித்து தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 உயில் ஆவணத்தில் 2 வது பக்கத்தில் உள்ள புகைப்படத்தில் உள்ள நபர் எனது மாமனார் சேவுகன் என்றால் சரிதான்.

15) நான் குடியிருக்கும் வீட்டிற்கு கிழக்கே கந்தசாமி காலிமனை மற்றும் 3 அடி அகல பொது சந்து ஒன்றும் உள்ளது என்றால் சரிதான். மேற்கே பழனியாண்டி காலிமனை உள்ளது என்றால் சரிதான், தற்போது அதில் வீடு கட்டப்பட்டுள்ளது. வடக்கில் வீதி என்றால் சரிதான். தெற்கில் சின்னம்மாள் மச்சுவீடு மற்றும் 3 அடி அகல பொது சந்து ஒன்றும் உள்ளது என்றால் சரிதான். எனது மாமனார் சேவுகன் கைரேகை வைப்பாரா அல்லது கையொப்பம் செய்வாரா என்றால் எனது மாமனார் படிப்பார், கையொப்பம் செய்வார்.

16) வா.சா.ஆ.7 ஆவணத்தில் புகைப்படத்திற்கு கீழே அ. சேவுகன் என்ற கையொப்பம் யாருடையது என்றால் தெரியாது. இவ்வழக்கில் வா.சா.ஆ.7 ஆவணத்தை தாக்கல் செய்த பிறகாவது எனது மாமனார் கலைமணிக்கு நான் குடியிருக்கும் வீட்டில் 1/3 பகுதியை பொறுத்து உயில் ஆவணம் பிறப்பித்து கொடுத்துள்ள விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன், ஆனால் அது செல்லாது.

17) மேற்படி உயில் ஆவணம் செல்லாது என்று கலைமணிக்கு எதிராக அறிவிப்பு ஏதேனும் கொடுத்துள்ளேனா அல்லது நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளேனா என்றால் இல்லை. எனது மாமனாரே எங்களது இடத்திற்கு மேல்புறத்தில் பழனியாண்டியின் இடம் என்று அவரே குறிப்பிட்டுள்ளார் என்றாலும், எங்களது இடம் மேல்புறம் உள்ள சுவருடன்

முடிந்துவிடுகிறது அதை தாண்டி உள்ள நிலத்தில் எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல.

18) எங்களது இடத்திற்கு மேல்புறம் உள்ள பழனியாண்டியின் சகோதரர் அம்மாசி என்றால் சரிதான். மேற்படி அம்மாசி அவரது பங்கு நிலத்தை 1984 ல் பழனியாண்டிக்கு எழுதிக்கொடுக்கும் போது கீழ்புறத்தில் வழிநடைபாதை என்று குறிப்பிட்டு எழுதிக்கொடுத்துள்ள விபரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் அவ்வாறு எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை.

19) எங்களது இடத்திற்கு மேற்கே உள்ள இடத்தை வாய்மொழியாக ஒப்படைத்தார்களா என்றால் எனது மாமனாரும், அவரது தகப்பனாரும் பாகம் பிரித்த போது நத்தத்தில் உள்ளதை எனது மாமனாரும், எனது இடத்திற்கு மேல்புறம் பழனியாண்டி கிரையம் பெற்ற சொத்தை அவர்களுக்குள் பிரித்துக்கொண்டார்கள். மேற்படி பழனியாண்டி உடன் பிறந்தவர்கள் தான் அயினான், அம்மாசி என்றால் சரிதான். மேற்படி பழனியாண்டியின் பிள்ளைகள் தான் இவ்வழக்கு வாதிகள் என்றால் சரிதான்.

20) வாதிகள் மூவரும் சேர்ந்து தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் 1, 2 வாதிகள் எவ்வித பிரச்சனையும் செய்யவில்லை, 3ம் வாதியே பிரச்சனை செய்து வருகிறார். அயினான், தன்னேரி, சுப்ரமணி மூவரும் சேர்ந்தே இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றாலும், ஆனால் 3ம் வாதி சுப்ரமணியே பிரச்சனை செய்து வருகிறார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

21) எனக்கு விபரம் தெரிந்து எங்களது சொத்து கீழ்புறத்தில் உள்ள இடத்தை அளந்து அத்து கட்டவில்லை என்றால் சர்வேயர் வைத்து அளக்க முயற்சித்த போது, 3ம் வாதி அளக்கவிடவில்லை. அவ்வாறு 3ம் வாதி அளக்கவிடாததற்காக காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நாங்கள் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நத்தத்தில் நாங்கள் குடியிருக்கும் முழு சொத்தும் எங்களது அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல, நாங்கள் தான் அனுபவம் செய்து வருகிறோம்.

22) வாதிகள் இடத்தில் செப்டிக் டேங்கிற்கு குழி பறித்த போது எதை வைத்து எங்களது இடத்தில் குழிப்பறிப்பதாக கூறுகிறோம் என்றால் அத்துக்கல்லை நகர்த்தியுள்ளார். எங்களது அத்துக்கல்லை நகர்த்தி வாதிகள் குழி பறித்தற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா, வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எங்களது இடம் மேல்புற சுவருடன் முடிந்து விடுகிறது என்றாலும், அதனால் தான் சேவுகனின் உயிலிலும், சுவருக்கு மேல்புறம் பழனியாண்டி இடம் என காட்டியுள்ளார் என்றாலும் சரியல்ல.

23) எங்களது வகையறாவும், வாதியின் வகையறாவும் உடன் பங்காளிகள் என்றாலும், அவர்களுடன் ஒத்துபோய் மேல்புறம் உள்ள நத்தம் இடத்தில் கிழமேல் 4 –1/2 அடி, தென்வடல் 40 அடி வாதிகளின் நடைபாதையாக பயன்படுத்தி வடபுறத்தில் உள்ள கிழமேல் வீதியை சென்றடைகிறார்கள் என்றாலும் சரியல்ல. மேற்படி விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், தெரிந்து கொண்டு வேண்டுமென்று மேல்புறம் உள்ள பாதையை மோசடியாக இல்லை என்றும், எனது இடத்தில் சேர்வதாக

பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

24) தாவா சொத்திற்கு கீழ்புறம் உள்ள நத்தம் இடத்தில் மேல்புறம் உள்ள பாதை நீங்கலாக மீதமுள்ள கீழ்புற இடத்தில் தான் எனது கணவருக்கு 1/3 பாகம் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கீழ்புற இடத்தில் எனது நாத்தனால் கலைமணிக்கு 1/3 பாகம் உள்ளது என்றால் சரியல்ல. எனது சொத்தை அளக்கும் போது வாதி வகையறா எந்த தடையும் செய்தது கிடையாது என்றால் சரியல்ல.

ஒப்பம்/– ப. கோபாலஅரசி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.